**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:- திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 08-ம் நாள் வெள்ளிகிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி 23-ம் நாள்**

**இடை நிலை மனு எண்.02/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.08/2020**

G. ரவிச்சந்திரன்

.... மனுதாரர் / பிரதிவாதி

**//எதிர்//**

C. வேடியப்பன்

....எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக 25.07.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.மோனிஷ்அரவிந்த், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சசிகுமார், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டுமென்று உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 9 விதி 13 பிரிவு 151-ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :-**

மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததாலும், மனுதரரை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லாததாலும் தோன்றாத் தரப்பினராக கருதி அசல் வழக்கில் என்கெதிராக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் கடந்த 07.02.2020-ம் தேதியில் நேரில் ஆஜரானார். மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 18.03.2020-ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டது. மேற்படி தேதிக்கு பின்னர்,

கோவிட் 19 வைரஸ் தொற்று லாக்டவுன் அறிவிக்கப்பட்டதால், மேற்படி வழக்கில் அடுத்த கட்ட நடவடிக்கை விவரங்கள் மனுதாரருக்கு தெரியாமல் போய்விட்டது. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்யவும் இயலாமல் போய்விட்டது. மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்த விவரமும் தெரியாமல் போய்விட்டது. மேற்படி கோவிட் 19 நோய் தொற்று காலங்களில் மனுதாரருக்கு மருத்துவர் வழங்கிய ஆலோசனைப்படி மனுதாரர் வீட்டிலேயே தங்கியிருந்ததாலும், மேற்படி வழக்கு குறித்து நீதிமன்றத்தை அணுகி விவரம் அறிய இயலாமல் போய்விட்டது. தற்போது மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நியமனம் செய்து வழக்கு விவரம் அறிந்து இம்மனு தாக்கல் செய்கிறார். மேற்படி தவறு தற்செயலாய் ஏற்பட்டது. வேண்டுமென்றோ, விரும்பியோ செய்த தவறில்லை. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் வெற்றி பெற நிறைய ஆவணங்களும், சாட்சியங்களும் உள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது மிகவும் அவசியமும், நீதிக்கு உகந்ததாகவும் உள்ளது. எனவே மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரரும் இவரது மகன்கள் இருவரும் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் AS.No.07/2019 எனும் மேல் முறையீட்டு வழக்கையும் இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி A.S.S.R.No.4669/2019 என்கிற மனுவையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி A.S.S.R.No.4669/2019 மனுவை இம்மனு மனுதாரர் 31.07.2019-ம் தேதியில் தயார் செய்து, ஊத்தங்கரையில் 21.08.2019-ம் தேதியில் கையெழுத்து செய்து 20.08.2019-ம் தேதியில் தாக்கல் செய்து அது முதல் மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் இன்றுவரை மனுதாரர் தொடர்ந்து பங்கு பெற்று வருகிறார். இதிலிருந்தே மனுதாரர் அவரது மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் முற்றிலும் பொய்யானது என்பது நிரூபணமாகும். இவ்வாறு கறைபடிந்த கைகளுடன் மனுதாரர் இந்நீதிமன்றத்தை அணுகியிருப்பதால் யாதொரு பரிகாரத்தையும் பெற அருகர் அல்லர். உண்மையில் மேற்படி அசல் வழக்கில் யாதொரு தகுதியான எதிர்வியாஜ்ஜியமும் மற்றும் வெற்றி பெறும் வாய்ப்பும் சிறிதும் இல்லாத

மனுதாரர் நீதியின் பலனை இந்த எதிர்மனுதாரர் எவ்வகையிலும் பெற்று விட கூடாது என தீய எண்ணம் கொண்ட மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி அசல் வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிப்பு செய்து இந்த எதிர்மனுதாரரை வீணாக அலைகழித்து வருகின்றார். இதன்படியே மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வேண்டுமென்றே அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்க விடுத்தும், அதனை தொடர்ந்து ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்க விடுத்தும் மேலும் இவைகளை ரத்து செய்ய உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்யாமலும் வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்து வருகிறார். எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் - மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததாலும், மனுதரரை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லாததாலும் தோன்றாத் தரப்பினராக கருதி அசல் வழக்கில் என்கெதிராக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் கடந்த 07.02.2020-ம் தேதியில் நேரில் ஆஜரானார் என்றும், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 18.03.2020-ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டது என்றும், மேற்படி தேதிக்கு பின்னர், கோவிட் 19 வைரஸ் தொற்று லாக்டவுன் அறிவிக்கப்பட்டதால், மேற்படி வழக்கில் அடுத்த கட்ட நடவடிக்கை விவரங்கள் மனுதாரருக்கு தெரியாமல் போய்விட்டது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்யவும் இயலாமல் போய்விட்டது என்றும், மேற்படி வழக்கில் கடந்த 24.11.2020-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்த விவரமும் தெரியாமல் போய்விட்டது என்றும், தற்போது மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நியமனம் செய்து வழக்கு விவரம் அறிந்து இம்மனு தாக்கல் செய்கிறார் என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரரும் இவரது மகன்கள் இருவரும் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் AS.No.07/2019 எனும் மேல் முறையீட்டு வழக்கையும் இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க

கோரி A.S.S.R.No.4669/2019 என்கிற மனுவையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி A.S.S.R.No.4669/2019 மனுவை இம்மனு மனுதாரர் 31.07.2019-ம் தேதியில் தயார் செய்து, ஊத்தங்கரையில் 21.08.2019-ம் தேதியில் கையெழுத்து செய்து 20.08.2019-ம் தேதியில் தாக்கல் செய்து அது முதல் மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் இன்றுவரை மனுதாரர் தொடர்ந்து பங்கு பெற்று வருகிறார் என்றும், மனுதாரர் நீதியின் பலனை இந்த எதிர்மனுதாரர் எவ்வகையிலும் பெற்று விட கூடாது என தீய எண்ணம் கொண்ட மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி அசல் வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிப்பு செய்து இந்த எதிர்மனுதாரரை வீணாக அலைகழித்து வருகின்றார் என்றும் எடுத்துரைத்தார். இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்து மனுதாரர் தரப்பில் கோவிட் 19 நோய் தொற்று காலங்களில் மனுதாரருக்கு மருத்துவர் வழங்கிய ஆலோசனைப்படி மனுதாரர் வீட்டிலேயே தங்கியிருந்ததாலும், மேற்படி வழக்கு குறித்து நீதிமன்றத்தை அணுகி விவரம் அறிய இயலாமல் போய்விட்டது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் வெற்றி பெற நிறைய ஆவணங்களும், சாட்சியங்களும் உள்ளது என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கெண்டும், மேற்படி மனுதாரர் 07.02.2020-ல் ஆஜராகி 18.03.2020-ல் வாய்தா வைக்கப்பட்டு, பின்பு 24.11.2020-ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக கூறும் காலங்கள் கொரானா தொற்று பாதிப்பு காலங்கள் என்பதாலும், இருதரப்பிலும் கூறும் சங்கதிகளை பரிசீலித்து தீர்ப்பு பிறப்பித்தால் தான் அது தகுதி வாழ்ந்ததாகவும் அறுதியானதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (08.08.2025) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை .**

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

**ஊத்தங்கரை.**